இந்திய ரிசர்வ் வங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४०००01
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन /Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

பிப்ரவரி 28, 2018

**வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 (AACS – கூட்டுறவு வங்கிகளுக்கும் பொருந்தும்)-ன் பகுதி 35A-ன் கீழ் வழிகாட்டுதல் உத்தரவுகள் – தி மராத்தா சஹகாரி வங்கி லிமிடெட், மும்பை, மஹாராஷ்டிரா**

**தி மராத்தா சஹகாரி வங்கி லிமிடெட், மும்பை, மஹாராஷ்டிரா** வங்கிக்கு, ஆகஸ்டு 31, 2016 தேதியிட்ட உத்தரவின்படி, வழிகாட்டுதல்கள் உத்தரவின் கீழ் வைக்க ஆகஸ்டு 31, 2016 அன்று வங்கியின் வர்த்தகத்தை முடித்த நாளில் உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்பட்டு, அடுத்தடுத்த கட்டளைகளின்படி கடைசியாக ஆகஸ்டு 28, 2017 தேதியிட்ட உத்தரவின்படி, பிப்ரவரி 28, 2018 வரை மறுஆய்வுக்கு உட்பட்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரிசர்வ் வங்கி, பொதுமக்கள்நலன் கருதி, இவ்வங்கிக்கு, வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 ன் பிரிவு 56 உடன் பிரிவு 35A இன் உப பிரிவு (1) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆகஸ்டு 31, 2016 தேதியிட்ட கட்டுப்பாட்டு உத்தரவினை அவ்வப்போது மாற்றங்கள் செய்து, கடைசியாக பிப்ரவரி 28, 2018 வரை நீட்டித்த கால அளவை, மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்து மார்ச் 01, 2018 முதல் ஆகஸ்டு 31, 2018 வரை மறுஆய்விற்கு உட்பட்டு உத்தரவிட்டுள்ளது.

பிப்ரவரி 26, 2018 தேதியிடப்பட்ட உத்தரவின் நகலை பொதுமக்களின் பார்வைக்காக வங்கியின் வளாகத்தில் வைக்கப்படுகிறது.

இவ்வாறு உத்தரவுகளில் திருத்தங்கள், மாற்றங்கள் வெளியிடப்படுவதன் காரணமாக, இந்திய ரிசர்வ் வங்கி, இந்த வங்கியின் நிதிநிலைமையில் முன்னேற்றம் கொண்டுவிட்டதாகக் கருதாது.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிக்கை வெளியீடு: 2017-2018/2324**